"இனிமையான குழந்தைகளே ! மற்றவர்களுக்கு புரியவைக்கும் சேவையை செய்து கொண்டே இருங்கள், ஞான செல்வத்தினை தானம் செய்தீர்கள் என்றால் அளவற்ற குஷி இருக்கும், அனைவருடைய ஆசிர்வாதம் கிடைக்கும், பாபாவினுடைய நினைவு மறக்காது"

கேள்வி: குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா ஆன்மீக ட்ரில் ஏன் கற்றுத் தருகிறார்?

பதில்: பலசாலி ஆவதற்காக. எந்தளவிற்கு நீங்கள் பாபாவின் நினைவில் இருக்கிறீர் களோ, படிப்பின் மீது கவனம் கொடுக்கிறீர்களோ, அந்தளவிற்கு உங்களுக்குள் சக்தி வந்து கொண்டிருக் கிறது. இந்த பலத்தின் மூலம் நீங்கள் மாயையின் மீது வெற்றி அடை கிறீர்கள். நீங்கள் எந்த ஸ்தூல ஆயுதங்களையும் பயன்படுத்துவதில்லை, சுயதரிசன சக்கரத்தின் மூலம் மாயையின் கழுத்தை துண்டிக்கிறீர்கள்... இது அகிம்சை யுத்தமாகும்.

பாடல்: குழந்தைப் பருவத்தின் நாட்களை மறக்காதீர்கள்......

ஓம் சாந்தி ! குழந்தைகள் இந்தப் பாடலின் அர்த்தத்தை புரிந்திருப்பீர்கள். பாபா செய்பவர் செய்விப்பவர் அல்லவா! ஆக இப்படிப்பட்ட பாடல்களை கூட பாபா குழந்தை களுக்காக உருவாக்கியிருக்கிறார். எல்லைக்கு அப்பாற்பட்ட தாய்-தந்தையினரின் குழந்தை களாக ஆன பிறகு மறக்கக் கூடாது, என்று குழந்தைகளுக்கு பாபா கூறுகின்றார். இந்த நினைவு பெரிய தாகும். நினைவு செய்து கொண்டே இருக்க வேண்டும். தாய்-தந்தை என்று சொல்கிறீர்கள் என்றால், தந்தையை கண்டிப்பாக நினைவு செய்ய வேண்டும். தாய்-தந்தையரின் நினைவு முதலில் ஏற்படுகிறது. பிறகு ஆஸ்திக்காக தந்தையைத் தான் நினைவு செய்ய வேண்டி யுள்ளது. தெய்வீக சுயராஜ்யம் உங்களுடைய ஈஸ்வரிய பிறப்புரிமை என்று எழுதப்பட்டுள்ளது. பரமபிதா பரமாத்மா உலகத்தைப் படைக்கக் கூடியவர் எனும் போது கண்டிப்பாக சொர்க்கம் புதிய உலகத்தைத் தான் படைப்பார். பாபா எப்போதாவது நமது பழைய வீட்டை கட்டுகிறேன் என்று சொல்வாரா? எப்போதும் புதிய வீட்டைத் தான் கட்டுகிறார். பழையதை உருவாக்குதல் என்ற வார்த்தை ஒருபோதும் வராது. எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை புதிய உலகத்தைத் தான் படைக்கின்றார். நாம் தாய்- தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைவதற்கு ஸ்ரீமத்படி நடந்து கொண்டிருக்கிறோம், என்பதை குழந்தைகள் இப்போது தெரிந்துள்ளீர்கள். இது புத்தியின் யாத்திரையாகும். அந்த ஸ்தூல (உடலின் மூலம் செய்யும் யாத்திரை) யாத்திரைகளையோ பிறவி-பிறவியாக செய்து கொண்டுதான் வருகிறார்கள். மேலும் அடிக்கடி செய்து கொண்டி ருக்கிறார்கள். இந்த ஆன்மீக யாத்திரை ஒரே ஒரு முறை தான் நடக்கிறது. ஆக யாத்ரிகர்கள் வழிகாட்டியை ஒருபோதும் மறக்க முடியாது அல்லது குழந்தைகள் தாய்- தந்தையை ஒருபோதும் மறக்க முடியாது. நீங்கள் பாண்டவ சேனைகள், உயர்ந்த வழிகாட்டி சிவபாபா ஆவார். நீங்கள் அவருடைய குழந்தைகள். பத்ரிநாத்திற்கோ அல்லது அமர்நாத்திற்கோ செல் கிறார்கள் என்றால் புத்தியில் யாத்திரை தான் நினைவிருக்கிறது. எப்படி வெளி நாட்டிலிருந்து திரும்புகிறார்கள் என்றால் தன்னுடைய பிறந்த இடம் தான் நினைவு இருக்கிறது. நாம் வீட்டிற்கு செல்கிறோம் என்ற மகிழ்ச்சி இருக்கிறது. குழந்தைகளாகிய உங்களுக்கும் நாம் நம்முடைய எல்லையற்ற வீடான இனிய

இல்லத்திற்கு செல்கிறோம் என்பது தெரியும். கண்டிப்பாக விகர்மங்களை வென்றவர்களாக ஆக வேண்டும். இதை பாபா தான் வந்து கற்றுத் தருகிறார். நினைவு அல்லது யோகம் இல்லாமல் உங்களுடைய விகர்மங்கள் வினாசம் ஆக முடியாது, என்று கூறுகிறார். யோகத்தின் மகிமை அதிகமாகும். பழமையான பாரதத்தின் யோகம் பழமையிலும் பழமையானது என்று பாடப் பட்டுள்ளது. சத்யுகம் புதிய உலகமாகும். ஆக இந்த சமயத்தில் பழைய உலகத்தில் பழமையான யோகத்தைக் கற்றுத் தருகிறார். யோகத்திற்கு அதிக மகிமை இருக்கிறது. பாபா இந்த யோகத்தை கற்றுக் கொடுத்து விட்டு செல்கிறார். பிறகு பக்தி மார்க்கம் ஆரம்பம் ஆகும். பழமையான யோகத்தை மனிதர்கள் மனிதர்களுக்கு ஒருபோதும் கற்றுத் தர இயலாது, என்று நீங்கள் சொல்வீர்கள். மற்ற அனைத்து அனேக விதமான யோகத்தை மனிதர்கள் மனிதர்களுக்குக் கற்றுத் தருகிறார்கள். அனைவருக் கும் உண்மையிலும் உண்மையான தந்தை ஒருவர் தான், மேலும் அனைவருக்கும் தாய் ஜகதம்பா, என்பதை இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். தந்தை என்று அனைவரையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முனிசிபாலிட்டி (நகராட்சி) சேர்மேனைக் கூட தந்தை என்று சொல்கிறார்கள், அதுபோல் நிறைய பேர் இருக்கிறார்கள். இறை தந்தை ஒருவரே ஆவார். அவர் தான் படைப்பவராக இருக்கிறார். உலகமும் ஒன்று தான். கீழேயோ அல்லது மேலேயோ ஏதாவது உலகம் இருக்கும் என்பது கிடையாது. மனிதர்கள் சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் ப்ளாட் வாங்குவதற்கு எவ்வளவு முயற்சி செய்கிறார்கள். எப்போது மிக அதிகமாக செல்கிறார்களோ அப்போது வினாசமாகி விடுகிறார்கள். எவ்வளவு தான் மண்டையை உடைத்துக் கொண்டாலும் எதுவும் கிடைப்பதில்லை.

இப்பொழுது பாபா கூறுகின்றார், செல்லக் குழந்தைகளே! குழந்தைப் பருவத்தை மறந்து விடாதீர்கள். இங்கே முதலில் தந்தையின் குழந்தைகளாக ஆகின்றோம். அதே தந்தை தான் பிறகு ஆசிரியராக ஆகின்றார். ஆஸ்தியை கொடுக்கக் கூடியவர் ஒரேயொரு பாபா தான், அவரிடமிருந்து தான் பிறகு எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கிறது. ஒன்று லௌகீகத் தந்தையிட மிருந்து குழந்தைகளுக்கு ஆஸ்தி கிடைக்கிறது, மற்றொருவர் பரலௌகீகத் தந்தையாவார். அவரைக் கூட படைப்பவர் என்று சொல்லப்படுகிறது. நான் மனித சிருஷ்டியின் விதையாக இருக்கின்றேன், என்று பாபா கூறுகின்றார். சத்-சித்- ஆனந்த சொரூபன், என்று என்னுடைய மகிமை பாடுகிறார்கள். பாபாவின் மகிமை முற்றிலும் தனிப்பட்டது, வேறு யாருக்கும் இந்த மகிமையைப் பாட முடியாது என்பதை புரிந்துள்ளீர்கள். உலகத்தின் எஜமானர்களான இலஷ்மி-நாராயணனுடைய மகிமை முற்றிலும் தனிப்பட்டதாகும். சர்வ குண சம்பன்ன ..... அஹிம்சா பரமோதரம், மரியாதா புருஷோத்தம், என்று அவர்களுடைய மகிமை பாடுகிறார்கள். முதல் நம்பரில் வரக்கூடிய சொர்க்கத்தின் மகாராஜா, மகாராணியின் மகிமையாகும். அந்த இராஜ்யமே அப்படி தான் ஆகும். எப்படி இராஜா இராணியோ அப்படி பிரஜைகளும் இருப்பார்கள். அங்கு துக்கம் என்ற பெயரே கிடையாது. பிரஜைகளுக்கு கூட துக்கம் என்ற பெயர் இல்லை. அப்படிப்பட்ட உலகத்தை கண்டிப்பாக பரமபிதா பரமாத்மா தான் படைப்பார் அல்லவா! அவரை சொர்க்கத்தைப் படைக்கும் இறை தந்தை என்று தான் சொல்லப்படுகிறது. ஆங்கிலேயர்கள் சொர்க்கம் என்ற வார்த்தையை சொல்கிறார்கள், ஆனால் சொர்க்கம் என்பது எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து

கொள்ளவில்லை. பாரதம் தான் சொர்க்கமாக இருந்தது. பாரதத்திற்கு மிக அதிகமான மகிமை இருக்கிறது. உங்களுடைய எதிரி இராவணன் ஆவான். உங்களுடைய எல்லையற்ற இராஜ்யத்தை இழக்கச் செய்தது, இந்த மாயை எதிரியாகும். அரைக்கல்பமாக நீங்கள் இராஜ்யத்தை இழந்து இருந்தீர்கள். இழந்து இழந்து நீங்கள் முற்றிலும் எதுவும் இல்லாதவர்களாக ஆகிவிட்டீர்கள். பிறகு உங்களுக்குத் தான் இராஜ்யம் பாக்கியமாக கிடைக் கிறது. உங்களைத் தான் கதாநாயகன், கதாநாயகி என்று சொல்வார்கள். ஒரு கதாநாயகன், கதாநாயகி பிறகு அவர்களுடைய வம்சாவழியினர், நீங்கள் அனைவரும் கதாநாயகன் கதாநாயகி ஆகின்றீர்கள் அதாவது முழு உலகத்தின் மீதும் வெற்றி அடை கின்றீர்கள். நீங்கள் இந்த சமயத்தில் கதாநாயகன், கதாநாயகி நடிப்பை நடித்துக் கொண்டிருக் கிறீர்கள். முழு உலகத்திலும் உங்களுக்கு பாபா கதாநாயகன் கதாநாயகி என்ற பட்டத்தை கொடுத்துக் கொண்டி ருக்கிறார். நீங்கள் சிவசக்தி சேனை ஆவீர்கள். நாம் யோக பலத்தின் மூலம் சொர்க்கத்தை உருவாக்குகிறோம், பிறகு நாம் சொர்க்கத்தில் இராஜ்ஜியம் செய்வோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். ஆனால் மாயை உங்களை மறக்க வைக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு வினாடியில் ஜீவன் முக்தி கிடைப்பது போல் மாயை ஒரு வினாடியில் மறக்க வைத்து விடுகிறது. ஜீவன் முக்தியை கைவிட்டுவிட்டு ஒரு வினாடியில் இறந்து விடுகிறார்கள். குழந்தைகளே! வாழ்க்கை எனும் பயணம் மிக நீண்டது, என்பதை பாபா புரிய வைத்து கொண்டே இருக்கிறார். முழுமையாக பாபாவை நினைவு செய்தீர்கள் என்றால் கடைசி நேரத்தில் புத்தியில் இருப்பதைப் போல் நிலை (அடுத்த பிறவி) ஏற்படும். எந்த தாய்-தந்தையரிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கிறதோ அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டால், பிறகு அந்த பக்கம் சென்று விடுகிறார்கள். குழந்தைகள் லக்னோவில் (பூல் புலையா) சிக்கலான பாதையை பார்த்திருப்பீர்கள், மனிதர்கள் உள்ளே சென்றவுடன் குழம்பி விடு கிறார்கள். இது கூட அதுபோலவே ஆகும். பாபா மற்றும் பாபா வின் வீட்டை மறந்து விடுவதின் மூலம் ஏமாற்றமடைந்து வணங்கிக் கொண்டே இருக்கிறார் கள். வழி காட்டக் கூடியவர் மேலே நின்று கொண்டிருக்கிறார்.

பாபா கூறுகின்றார் நீங்கள் இப்போது மாயையின் மீது வெற்றியடைவதற்காக ஸ்ரீமத்படி முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். இன்று தாய்-தந்தை என்று சொல்லிவிட்டு நாளை மறந்து விடுவது இல்லை. இங்கே மற்ற தொடர்புகளை துண்டித்து விட்டு ஒருவரோடு தொடர்பை இணைக்க வேண்டும். பக்தி மார்க்கத்தில் நான் பலியாகிறேன் சமர்பணம் ஆகிறேன்..... என்றும், பாடுகிறார்கள், கிருஷ்ணருடைய பெயரால் பாடுகிறார்கள். உண்மை யில் கிருஷ்ணருடைய விஷயம் இல்லை. இது ருத்ர ஞான யக்ஞமாகும். ருத்ரன் என்று சிவனைத் தான் சொல்லப்படுகிறது. இவ்வளவு சின்ன விஷயத்தைக் கூட மனிதர்கள் புரிந்து கொள்வ தில்லை. (பிரம்மா) பாபா கீதையை நிறைய படித்திருக்கிறார். ஆனால் முதலில் எதுவுமே புரிந்து கொள்ளவில்லை. இப்போது புரிந்து கொள்கிறார், அதில் பகவானுடைய மகாவாக்கியம் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த ருத்ர ஞான யக்ஞத்திலிருந்து வினாச ஜுவாலை வெளிப்படுகிறது. ருத்ர ஞான யக்ஞத்தை பிறகு கிருஷ்ண யக்ஞம் என்று சொல்லி விட்டார்கள். ருத்ரன் கூட கிருஷ்ணருடைய அவதாரம், என்று சொல்லி விஷயத்தை தூக்கி விட்டார்கள். இப்போது பாபா கூறுகின்றார், நான் உங்களுக்கு இராஜ யோகம் கற்றுத் தரு கின்றேன் என்றால் இராஜ்யம் செய்வதற்கு புதிய

உலகம் வேண்டும். தீபாவளி அன்று இலஷ்மியை வந்தனம் செய்வதற்கு எவ்வளவு சுத்தம் செய்கிறார்கள். அது பக்தி மார்க்கத்தின் வழக்கமாகும். இங்கேயோ நீங்கள் மனிதனிலிருந்து தேவதையாக ஆகிறீர்கள் என்றால் கண்டிப்பாக முற்றிலும் புதிய உலகம் வேண்டும். இதற்காக பழைய உலகம் வினாசம் ஆகிறது. ருத்ர ஞான யக்ஞத்திலிருந்து வினாச ஜுவாலை வெளி வந்தது, என்று கீதையில் முற்றிலும் தெளிவாக இருக்கிறது. பாபா தான் எல்லையற்ற சிருஷ்டியை படைப்பவர் ஆவார். குழந்தை களே! தந்தையாகிய என்னை மறந்து விடாதீர்கள், என்று பாபா கூறுகின்றார். இன்று சிரிக்கிறீர் கள் நாளை மறந்து விட்டீர்கள் என்றால் முடிந்தது. பிறகு இதுவரை அழுதிராத அளவுக்கு அழ வேண்டிவரும். இராஜ்யத்தை இழந்து அமர்ந்திருக் கிறீர்கள், பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடும். நஷ்டமடைந்த மனிதர்களின் முகம் வெளிறிப் போய்விடுகிறது. ஆகவே பாபா கூறுகின்றார், பரலௌகீக தந்தை மற்றும் ஆஸ்தியை மறந்து விடாதீர்கள். மற்றவர்களுக்கு புரிய வைக்கும் சேவை செய்து கொண்டே இருங்கள். சேவையில் பிசியாக இருந்தீர்கள் என்றால் மறக்க மாட்டீர்கள். செல்வத்தை கொடுத்தீர்கள் என்றால் செல்வம் குறையாது, எவ்வளவு தானம் செய்வீர்களோ அவ்வளவு குஷியின் அளவு அதிகரிக்கும். மற்றவர்களுடைய ஆசிர்வாதம் உங்களது தலையில் இருக்கும். சொர்க்கத்திற்கு வழி சொன்ன அப்படிப்பட்ட வழிகாட்டிக்கு பலியாவேன், என்று சொல்வார் கள். இங்கே நடைமுறையில் பாபாவிற்கு நன்றி சொல்லப் படுகிறது. எப்போதும் எல்லையற்ற அமைதியை கொடுக்கக் கூடியவன் நான் தான், என்று பாபா கூறுகின்றார். ஒருபோதும் துக்கம், அமைதியற்ற தன்மை ஏற்படாத அளவிற்கான கர்மத்தை செய்ய உங்களுக்கு நான் கற்றுத் தருகிறேன். கர்மத்தின் நிலைகள் மிகவும் ஆழமானதாகும். பாபா கூறுகின்றார், நான் உங்களுக்கு கர்மம், அகர்மம், விகர்மத்தின் இரகசியத்தைப் புரிய வைக்கின்றேன். சத்யுகத்தில் கர்மம் விகர்மமாக ஆவதில்லை, அங்கே கர்மம் அகர்மமாக இருக்கிறது, ஏனென்றால் அங்கே மாயை இல்லை, இப்போதோ இங்கே மாயையின் இராஜ்ய மாக இருக்கிறது, ஆகையால் கர்மம் விகர்மமாக இருக்கிறது. இப்போது நீங்கள் டிரில் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் பலசாலி ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த படிப்பை கடைசி வரை படிக்க வேண்டும். எவ்வளவு படிக்கிறீர்களோ அவ்வளவு சக்தி கிடைக்கும், வளர்ந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு மடத்திலும் பின்பற்றுபவர்கள் முதலில் ஒருவர் வருகிறார், பிறகு வளர்ந்து விடுகிறது. இன்றைக்கு உலகத்தில் கண்மூடித் தனமான விஷயங்கள் நிறைய இருக்கிறது, இங்கே இது படிப்பாகும், இதில் கண்மூடித்தனமான விஷயம் ஏதும் இல்லை. அவர்கள் ஒரே சொற்பொழிவில் எவ்வளவு பேரை, பௌத்தர்களாகவோ, அல்லது கிருத்துவர் களாகவோ ஆக்கிவிடுகிறார்கள். பாதிரியார்கள் தான் நிறைய சொற்பொழிவாற்று கிறார்கள், பிறகு நிறைய பேர் கிருத்துவர்களாக ஆகிவிடுகிறார்கள். இங்கே அது போன்ற விஷயம் இல்லை. இங்கே மாயையுடன் யுத்தம் செய்ய வேண்டும், இது யுத்த ஸ்தலமாகும். பகவான் வந்து ஹிம்சையையா கற்றுக் கொடுப்பார். அஹிம்சையின் பலம் வேண்டும் என்று சொல் கிறார்கள், ஆனால் ஹிம்சை மனிதர்கள் அஹிம்சையைக் கற்றுத் தர முடியாது. நாம் பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கிறோம், என்பதை குழந்தைகளாகிய நீங்கள் இப்போது தெரிந்துள்ளீர்கள். மாலையை உருட்டிக் கொண்டே இராமா-இராமா என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரேதாயுக கடைசி வரை 16,108 இளவரசன்

இளவரசி ஆகி விடுகிறார்கள். இதில் முக்கியமானவர்கள் 8 பேர் ஆவர். 8-இரத்தினங்களுக்கு மிகுந்த மகிமை இருக்கிறது. இதனுடைய இரகசியம் என்ன வென்று மனிதர்கள் கொஞ்சமாவது புரிந்து கொள்கிறார்களா? 8 இரத்தினங்கள் மதிப்புடன் தேர்ச்சி பெறுகிறார்கள், முற்றிலும் தண்டனை அடைவதில்லை. மற்ற 100 பேரோ கொஞ்சம் தண்டனை அடைகிறார்கள். பாபா கூறுகின்றார் குழந்தைகளே களைப்படைந்து விடாதீர்கள். ஓ, இரவு பிரயாணிகளே! இப்போது நாம் இரவைக் கடந்து பகலுக்குச் செல்கிறோம். பாபா கூட சங்கமத்தில் வருகிறார். அரைக் கல்பத்தின் இரவு முடியும்போது பாபா வருகிறார், ஆகையால் தான் சிவராத்திரி என்று சொல்கிறார்கள். சிவபாபாவின் ஜாதகத்தை உங்களைத் தவிர வேறு யாரும் சொல்ல முடியாது. பிரம்மாவின் இரவு மற்றும் பிரம்மாவின் பகல் எல்லையற்றது என்று பாடப்பட்டுள்ளது. காரிருளிலிருந்து முழு வெளிச்சம் ஏற்படுகிறது. இரவு முடிந்து பகல் வரும்போது கடைசியில் பாபா வருகிறார். ஆக பிரம்மாவினுடைய இரவு எல்லையற்றதாகும். இவை புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் அல்லவா! பாபா அவரே கூறுகின்றார், நான் சாதாரண உடலில் பிரவேசம் ஆகின்றேன். இவர் தன்னுடைய பிறவிகளைப் பற்றி தெரிந்திருக்கவில்லை, நான் கூறுகின்றேன் பிரம்மா மற்றும் பிரம்மா குமார-குமாரிகளுக்கு இவ்வளவு பிறவிகளாகும். இவையனைத்து விஷயங்களையும் கல்பத்திற்கு முன்னால் இருந்தவர்கள் தான் புரிந்து கொள்வார்கள். நாம் இப்போது பாபாவை தெரிந்து கொண்டதின் மூலம் ஆத்திகர்களாக ஆகியுள்ளோம். பாபாவிடமிருந்து ஆஸ்தியை அடைகிறோம்.

ஆத்மாக்களின் தந்தை ஒருவரே. பிரம்மாவும் கூட சிவபாபாவின் குழந்தை ஆவார். தத்தெடுத் திருக்கிறார் அல்லவா! நான் இவருக்குள் பிரவேசமாகின்றேன், என்று அவரே சொல் கிறார். வேறு யாரும் இப்படி பேச முடியாது. பாபா கூறுகின்றார் செல்லக் குழந்தை களே! தந்தையை ஒருபோதும் மறக்காதீர்கள். மறந்தீர்கள் என்றால் சொர்க்கத்தின் ஆஸ்தியை இழந்து விடுவீர் கள், பிறகு அழ வேண்டி வரும். கல்ப-கல்பத்தினுடைய விளையாட்டாக ஆகிவிடுகிறது. கல்பம்-கல்பத்திற்கு இப்படி செய்து கொண்டே இருப்பீர்கள்.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) வாழ்க்கையின் நீண்ட பயணத்தில் களைப்படையக் கூடாது. தாய்-தந்தையிடமிருந்து ஒருபோதும் முகத்தை திருப்பக்கூடாது. மற்ற தொடர்புகளை துண்டித்து ஒரு பாபா விற்கு முழுமையாக பலியாக வேண்டும்.

(2) இனிய வீட்டிற்குச் செல்வதற்காக முதலில் விகர்மங்களை வென்றவர்களாக கண்டிப்பாக ஆக வேண்டும். ஸ்ரீமத்படி புத்தியின் யாத்திரை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| வரதானம் : | கூடவே இருப்போம், கூடவே வாழ்ந்திருப்போம் என்ற உறுதிமொழியின் நினைவு மூலம் இணைந்த ரூபத்தில் இருக்கக் கூடிய சகஜயோகி ஆகுக. |

குழந்தைகளாகிய உங்களது உறுதிமொழி - கூடவே இருப்போம், கூடவே வாழ்ந்திருப் போம், கூடவே செல்வோம் இந்த உறுதிமொழியை நினைவில் வைத்து, பாபாவுடன் நீங்கள் இணைந்த ரூபத்தில் இருப்பீர்களானால், இந்த சொரூபம் தான் சகஜயோகி என்று சொல்லப் படுகிறது. யோகா செய்பவராக இல்லாமல், சதா இணைந்த ரூபத்தில் அதாவது கூடவே இருப்பவர்கள் தாம் நிரந்தர யோகி, சதா சகயோகி, சதா பறக்கும் கலையில் செல்லக் கூடிய ஃபரிஸ்தா சொரூபம் ஆகிறார்கள்.

சுலோகன்: கேள்விக்குறி என்ற வளைந்த பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக நன்மைக்கான பிந்தி (புள்ளி) வைப்பது தான் கல்யாண்காரி ஆவதாகும்.